https://puthusudar.lk/
puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

15th SEPTEMBER 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 97



## கள்ள வாக்குப் போட்டால் ரூ.2 லட்சம் அபராதம் ஒரு வருட சிறை

கள்ள வாக்குப் போட்டால் அல்லது அதற்கு உதவி செய்தால் நீதிமன்றால் இரண்டு லட்சம் ரூபா அபராதமும் ஒரு வருட சிறைத் தண்டனையும் விதிக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆகவே, இவ்வாறான தேர்தல் சட்டங்களை மீறும் செயற்பாடுகளில் யாரும் ஈடுபட வேண்டாம் என்று ஆணைக்குழு அனைவரையும் கேட்டுக்கொள்கிறது.

## பிரசாரக் கூட்டங்களுக்குள் வெளிநாட்டு உளவாளிகள்

இந்த ஜனாதிபதி யார் வெல்வார் என்று அறிவதற்காக அமேரிக்கா, சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகளின் உளவாளிகள் பிரசாரக் கூட்டங்களுக்குள் நுழைந்துள்ளனர் என்று மேற்படி நாடுகளின் தூதரகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரணில் விக்ரமசிங்க,அனுரகுமார, சஜித் மற்றும் நாமல் ஆகிய வேட்பாளர்களின் கூட்டங்களுக்குள் நுழைந்தே அவர்கள் ஆய்வு செய்து வருகின்றனர் என்று அறிய முடிகிறது.



### இன்னும் தொடர்கிறது கட்சி தாவல்:

# சஜித் தரப்பை நோக்கி ஆளுநர்:

## ரணிலின் பக்கம் சஜித் தரப்பு எம்பி

தேர்தல் இடம்பெறுவதற்கு ஒரு வாரம் இருக்கின்ற நிலையில்,மேலும் சில கட்சி தாவல்கள் இடம்பெறவுள்ளன என்று தகவல்கள் கூறுகின்றன. அந்த வகையில், ஐக்கிய மக்கள் சக்தியைச்

02



### கிழக்கில் சூரிய மின்சாரத் திட்டம்:

## அரசிடம் 700 ஏக்கர் காணி கேட்டு சண்டை போடும் கட்சி தாவிய அமைச்சர்

எதிர்க்கட்சியில் இருந்து அண்மையில் கட்சி தாவிய அமைச்சர் ஒருவர் கிழக்கில் சூரிய மின்சாரத் திட்டம் ஒன்றைச் சொந்தமாகத் தொடங்குவதற்கு காணி அமைச்சிடம் 700 ஏக்கர் காணியைக் கேட்டுள்ளார்.

அமைச்சின் முதுகெலும்புள்ள அதிகாரிகள் அவரது கோரிக்கையை நிராகரித்துள்ளனர்.

இதனால் ஆத்திரமடைந்த அமைச்சர் அரசின் மேல் மட்டத்திடம் முறைப்பாடு செய்துள்ளார்.

அப்போதும் மசியாத அதிகாரிகள் இவரை அடக்குவதற்காக இந்தத் தகவலை மெல்ல கசியவிட்டுள்ளனர்.

## 48 மணி நேரம் சமூக ஊடகங்கள் தற்காலிகமாக நிறுத்தப்படும்?



ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்கள் முடிவடைந்த பின்னர் 48 மணித்தியாலங்கள் அமைதியான காலப்பகுதியில் வேட்பாளர் பிரசாரம் மற்றும் சமூக ஊடகங்களில் சேறு பூசுவதை நிறுத்துவதற்கான விரிவான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தேர்தல்கள் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு மற்றும் சமூக ஊடக வலையமைப்பைச் சேர்ந்த நிறுவனங்களுடன் இணைந்து இந்தத் திட்டத்தை தயாரிப்பதில் கவனம் செலுத்தியுள்ளதாகவும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்கள் எதிர்வரும் 18ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவடைவதோடு, 19ஆம் மற்றும் 20ஆம் திகதிகளில் அமைதியான காலகட்டமாக இருக்கும்.

இந்த காலப்பகுதியில் பிரச்சாரம் செய்வது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ள போதிலும் சமூக வலைத்தளங்கள் ஊடாக பிரசாரம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

02



புதுச்சுடர்
www.puthusudar.lk
2024 SEPTEMBER 15 - SUNDAY

# சிந்தித்து வாக்களியுங்கள்

அடுத்த வாரம் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறவுள்ளது..

தேர்தலை ஒத்திப்போடுவதற்காக ஜனாதிபதி நகர்த்திய அத்தனை காய்களும் வீண் என்றே சொல்ல வேண்டும்.

ஏனைய தேர்தல்களை விடவும் இந்தத் தேர்தல் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது.

மக்களால் அதிகம் எதிர்பார்க்கப் பட்டது.

அதற்கு காரணம் பொருளாதார நிலைமைதான்

மிகுந்த எதிர்பார்ப்புடன் 2019இல் கோத்தாபாய ராஜபக்சவை ஜனாதிபதியாக் கினார்கள் மக்கள்.

எல்லாமே வெகு சீக்கிரத்திலேயே பிழைத்துப் போயின.நாட்டு மக்களை முற்றாக ஏமாற்றிவிட்டு அனைவரையும் பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளினார்.

தாம் அவசரப்பட்டு இனவாத பிரசாரத்துக்குள் சிக்கி திறமையற்ற ஒருவரை ஜனாதிபதியாக்கி விட்டோம் என்று எண்ணி மக்கள் வருந்தினர்.

இதனால் பொங்கி எழுந்து அவரை விரட்டியடித்தனர்.

இரண்டு வருடங்களில் அவரது ஆட்சி முடிவுக்கு வந்தது.

அவரது மிகுதி காலத்துக்கு ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தால் மொட்டு கட்சியின் ஆதரவுடன் ஜனாதிபதியாக் கப்பட்டார்.

அப்போது மொட்டு கட்சிக்கு நாட்டு மக்களால் ஏற்பட்ட அச்சுத்தலில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் நோக்கிலேயே ரணிலை அவர்கள் ஜனாதிபதியாக நியமித்தனர்.

அந்தப் பணியை ரணில் கச்சிதமாகச் செய்தார் மொட்டு கட்சியினதும் ராஜபக்ச குடும்பத்தினதும் பாதுகாப்பை நூறு வீதம் உறுதிப்படுத்தினார்.

மக்களை சாந்தப்படுத்துவதற்காக அப்போது இருந்த பெரிய பிரச்சினையான எரிபொருள் மற்றும் மின்சார பிரச்சினையைத் தீர்த்து வைத்தார்.

இதனால் மக்களின் கோபம் சற்றுத் தணியத்தொடங்கியது. ஆனால், மறுபுறம் மக்கள் இறுகத் தொடங்கினர். ரணில் சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவியைப் பெறுவதற்காக அந்த நிதியம் விதித்த கடுமையான நிபந்தனைகளை அப்படியே ஏற்று அமுல்படுத்தத் தொடங்கினார்.

இதனால் பல வரிகள் அறிமுகப்படுத் தப்பட்டன. இதனால் பொருட்களின் விலைகள் தாறுமாறாக ஏறி மின் கட்டணமும் அதிகரிக்கப்பட்டது.

மின் கட்டண அதிகரிப்பால் கட்டணத்தை செலுத்த முடியாமல் மக்கள் திண்டாடினர். இப்போதும் திண்டாடுகிறார்கள்.

லட்சக்கணக்கான இணைப்புகள் துண்டிக்கப்பட்டன.

மறுபுறம்,ஊதிய வரி அறிமுகத்தால்

வைத்தியர்கள் உள்ளிட்ட தொழில் நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறத் தொடங்கினர்.

இன்னும் மக்கள் அதே கஷ்ட நிலையில்தான் உள்ளனர்.

பொருட்களின் விலை அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. குறையவே இல்லை.

எரிபொருளையும் மின்சாரத்தையும் பெற்றுக்கொடுத்துவிட்டு பொருளாதார பிரச்சினையைத் தீர்த்துவிட்டோம் என்று சொல்கிறது அரசு.

இப்படியானதொரு நிலையில்தான் இப்போது ஜனாதிபதி தேர்தல் வந்திருக்கிறது.

இந்தத் தேர்தலில் இனவாதம் எடுபடாது. நாட்டைக் கட்டியெழுப்பும்- மக்களின் வாழ்வை முன்னேற்றும் சரியான பொருளாதார கொள்கையே எடுபடும்.

உண்மையில், இதை அடிப்படையாக வைத்தே யாருக்கு வாக்களிப்பது என்று மக்கள் முடிவெடுக்க வேண்டும்.அதுவே சரியான முடிவாக அமையும்.

## 48...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சமூக ஊடக குழுக்களுடன் கலந்தாலோசித்த பின்னர் மௌன காலத்தில் தேர்தல் பிரசாரம் மற்றும் அவதூறு பரப்புரைகளை நிறுத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தீவிர முயற்சிகளை மேற்கொள்ளும் என ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

இந்த பிரச்சாரங்களில் பெரும்பாலானவை வெளிநாடுகளில் இருந்து செய்யப்படுவதாகவும் அவர் குறிப்பிடுகிறார்.

அந்த நிறுவனங்களுடன் கலந்துரையாடி சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட அவதூறு பிரச்சாரங்கள் போன்றவற்றை நீக்குவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தலைவர் குறிப்பிட்டார்.

அமைதியான காலத்தில் சமூக வலைத்தளங்களில் மேற்கொள்ளப்படும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை தடுக்கும் வகையில் தேர்தல் ஆணையம் அமைப்பு ஒன்றை தயாரித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இன்னும்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

**சேர்ந்த-மேல் மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எம்பி ஒருவர் ஜனாதிபதி ரணிலின் பக்கம் பாயவுள்ளார் என்று கூறப்படுகிறது.**

**அதேவேளை,பிரபல அரசியல் குடும்பம் ஒன்றைச் சேர்ந்த ஆளுநர் ஒருவர் சஜித்தின் பக்கம் செல்லவுள்ளார் என்றும் அதைத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.**



ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கஹவை ஆதரித்து தேர்தல் பிரச்சார கிளை அங்குரார்ப்பணம் சம்மாந்துறையில் நேற்று இடம்பெற்றது. ஐ.தே.க. செயற்பாட்டாளரும், முன்னாள் பிரதேச சபை உறுப்பினருமான யூசுப் லெவ்வை தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் மஞ்சுள பெணாண்டோ பங்கேற்று கிளையினை அங்குரார்ப்பணம் செய்வதை படத்தில் காணலாம்.

(படங்கள் - அலியார் ஜெஸீம்)






SEPTEMBER 2024 INTAKE
UK Endorsed
Diploma Programs
UK Diploma In Psychology and Counseling
UK Diploma In Information Technology
UK Diploma In Teacher Training
UK Diploma In Business Management
UK Diploma In Early Childhood Education
UK Diploma In English
10% Discount for the First 100 Students
Recognitions
City & Guilds Approved Centre
bcs The Chartered Institute for IT
Skill Development Council Canada
BRITISH COUNCIL
IIC UNIVERSITY OF TECHNOLOGY
QUALIFI
Member of : FITIS
UK Qualified
HND Programs
HND (UK) in Psychology and Counseling
HND (UK) In Information Technology
HND (UK) In Teacher Training
HND (UK) In Business Management
HND (UK) In English
TOP UP DEGREES
Bachelor's of Education
BA in English
Bachelor's of Psychology
Bachelor's of Business Admin (BBA)
IAU INTERNATIONAL ASSOCIATION OF UNIVERSITIES
WHED World Higher Education Database
UGC RECOGNIZED
WES WORLD EDUCATION SERVICES APPROVED
+94773 208 023
AMAZON COLLEGE Where Success Begins
AMAZON COLLEGE & CAMPUS
294, 2nd Floor Galle Road, Colombo-4.
+94112591110 / +94114386126
info@amazoncollege.lk
www.amazoncollege.lk
WHERE SUCCESS BEGINS 15TH YEARS ANNIVERSARY

# சரியான திட்டம்



எமது வாக்குகளை பெற்று –எம்மை ஏமாற்றி எமது தலைவர்கள் செய்கின்ற ஊழல், மோசடிகளை இனிமேலும் பார்த்துக்கொண்டு இருக்க முடியாமல்தான் நாம் ஜேவிபிக்கு வெளிப்படையாக ஆதரவு வழங்கத் தொடங்கியுள்ளோம் என்கிறார்கள் ஜேவிபியை ஆதரிப்பவர்கள்.

இவர்களை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தில் வேறு வழி இல்லாமல் நாம் ஜேவிபியை ஆதரிக்க வில்லை.

இவர்களின் திருட்டுக்களுக்கு எதிராக அவர்களின் அரசியல் அமைந்துள்ளதால்தான் அவர்களை நாம் நாடுகிறோம் என்கிறார்கள் அவர்கள்.

ஒருவேளை, ஜேவிபியும் இப்படியான கட்சியென்றால் அவர்களை நாங்கள் ஏறெடுத்தும் பார்க்கப்போவதில்லை.

இந்தத் திருட்டுக்கள் தொடர்பில்–அவற்றை ஒழிப்பது தொடர்பில் மக்கள் என்ன நிலைப்பாட்டில் இருக்கிறார்களோ அதே நிலைப்பாட்டில் ஜேவிபியும் இருப்பதால்தான் அவர்களை நாம் ஆட்சியில் அமர்த்த வேண்டும் என்று கூறுகிறோம் என்கிறார்கள்..

அப்படியான மோசடிகளில் ஒன்றுதான் எம்பிக்களுக்கான–அமைச்சர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்கள்.

அமைச்சுப் பதவிகளில் அமர்ந்து – கொள்ளையடித்து கொழும்பில் பல கோடி ரூபா பெறுமதியான மாடி வீடுகளை அமைத் துள்ள அமைச்சர்கள் ஆந்த வீடுகளில் தங்குவதில்லை.

அவற்றை பல லட்சம் ரூபாவுக்கு வாடகைக்குக் கொடுத்துவிட்டு அரசால் வழங்கப்படும் உத்தியோகபூர்வ இல்லங்களில்தான் தங்குகின்றனர்.

நீர் கட்டணம்–மின் கட்டணம்–தொலைபேசி கட்டணம்–வீட்டு பராமரிப்பு செலவு என மாதாந்தம் லட்சக் கணக்கில் அரசால் பணம் செலவிடப்படுகிறது.

இது எவ்வளவு பெரிய அநியாயம்.

மக்களின் பணத்தைக் கொள்ளையடித்து வீடு கட்டியது போதாதென்று அரச இல்லங்களை பெற்று அதற்கும் மக்களின் பணமே செலவிடப்படுகிறது.

கொழும்பு BMICH பக்கம் முஸ்லிம் அரசியல்வாதி ஒருவரின் பெரிய வீடு இருக்கிறது.

ஆனால், அதை அவர் அவருடன் நெருக்கமான யாருக்கும் காட்டியது கிடையாது.

அதை அவர் பல லட்சம் ரூபாவுக்கு வாடகைக்குக் கொடுத்துவிட்டு அரச இல்லத்தில்தான் குடியிருக்கிறார்.

அதிகமான அரசியல்வாதிகள் இப்படித்தான்.

இது நியாயம்தானா?

> கொழும்பு **BMICH** பக்கம் முஸ்லிம் அரசியல்வாதி ஒருவரின் பெரிய வீடு இருக்கிறது. ஆனால், அதை அவர் அவருடன் நெருக்கமான யாருக்கும் காட்டியது கிடையாது. அதை அவர் பல லட்சம் ரூபாவுக்கு வாடகைக்குக் கொடுத்துவிட்டு அரச இல்லத்தில்தான் குடியிருக்கிறார். அதிகமான அரசியல்வாதிகள் இப்படித்தான்.

/ இதைத் தடுக்க வேண்டாமா என்று நினைப்போருக்கு ஜேவிபியிடம் மாத்திரம்தான் அதற்குத் தீர்வு இருக்கிறது என்கிறார்கள் ஜேவிபி ஆதரவாளர்கள்..

அதுதான்.....!!!

கொழும்பில் சொந்த வீடுகளை வைத்திருப்போருக்கு அரச வீடுகள் வழங்கப்படமாட்டாது என்ற ஜேவிபியின் அறிவிப்பு.

இதுதானே தேவை. இப்படிப்பட்ட மாற்றம்தானே தேவை. சிந்தித்து முடிவெடுங்கள் என்கிறார்கள் ஜேவிபி ஆதரவாளர்கள்.

# துஜா-எல VIMAN மாதிரி தொடர்மாடிக் குடியிருப்புத் திட்டத்தில் அனுபவத்தைப் பெற்ற NDB வங்கி வாடிக்கையாளர்கள்



ஜா-எல VIMAN தொடர்மாடிக் குடியிருப்புத் தொகுதியில் முதலீடு செய்ய எதிர்பார்த்திருக்கும் வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் John Keells Properties நிறுவனம் NDB வங்கியுடன் பங்குடமையை ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் வங்கியின் நெகிழ்ச்சியான அடகுத் தீர்வுகளின் ஊடாக வாடிக்கையாளர்களுக்கு வீட்டுக் கனவைப் பூர்த்திசெய்ய முடியும்.

இதன் ஓர் அங்கமாக ஜா-எல VIMAN மாதிரி தொடர்மாடிக் குடியிருப்புத் திட்டத்தை வங்கியின் முன்னணி வாடிக்கையாளர்கள் நேரில் சென்று பார்வையிடுவதற்கான நிகழ்வொன்றை John Keells Properties நிறுவனம் 2024 ஜுன் 26ஆம் திகதி ஏற்பாடு செய்திருந்தது.

ஜா-எல நகரத்தின் இதயப் பகுதியில் 6 ஏக்கர் நிலப்பரப்பு விஸ்தீரணத்தில், சௌகரியமான நவீன 418 தொடர்மாடி வீடுகளைக் கொண்டிருக்கும் ஜா-எல VIMAN குடியிருப்புத் திட்டமானது, பாதுகாப்பான, நட்பான குடும்ப சூழல், சிறிய நகரக் கட்டமைப்புக்குள் இருந்துகொண்டு கொழும்பு நகருக்கான அணுகல் என கலவையான வசதிகளை வழங்குகிறது.

வாடிக்கையாளர்களுடன் நெருக்கமான ஈடுபாட்டை ஏற்படுத்திக் கொண்ட John Keells Properties நிறுவனத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தலுக்கான தலைவரும், John Keells Group இன் பிரதித் தலைவருமான நதீம் ஷம்ஸ் மற்றும் அந்நிறுவனத்தின் விற்பனைக் குழுவினர் ஜா-எல Viman திட்டத்தில் முதலீடு செய்வதில் காணப்படும் பல்வேறு நன்மைகள் மற்றும் அதில் முதலீடு செய்யுமாறு வலியுறுத்துவதற்கான காரணம் மற்றும் வாழ்க்கைக்கு சிறந்த இடமாக அடையக் காரணம் போன்ற பல்வேறு விடயங்களுக்கு விளக்கமளித்தனர்.

# பிரிட்டிஷ் கவுன்சில் விளக்கக்கூட்டம்




2024 ஆம் ஆண்டுக்கான பொதுநலவாய அறிஞர்கள் குழுவினருக்கு, அவர்கள் புறப்படுவதற்கு ஆயத்தமாக இருந்த வேளையில் அவர்களுக்கு ஒன்றோடொன்று தொடர்புபட்ட மற்றும் தகவலறிந்த புறப்பாட்டிற்கு முன்னரான விளக்கவுரையை இலங்கையின் பிரிட்டிஷ் கவுன்சில் வெற்றிகரமாக நடத்தியது.

பிரிட்டிஷ் கவுன்சில் நூலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில், இந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட 5 அறிஞர்களுக்கு ஐக்கிய இராஜ்ஜியத்தில் உள்ள அந்தந்த பல்கலைக்கழக பகுதிகளுக்கு சுமூகமான பயணத்தை மேற்கொள்வதை உறுதி செய்வதற்காக ஐக்கிய இராஜ்யம் பற்றிய பெறுமதியான தகவல்கள், குறிப்புகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட தரவுகள் என்பன வழங்கப்பட்டன.

பொதுநலவாய புலமைப்பரிசில்கள் ஐக்கிய இராஜ்யத்தில் உள்ள பொதுநலவாய புலமைப்பரிசில் ஆணைக்குழுவினால் (CSC) உலகளாவிய அரங்கிலும் அவர்களின் சொந்த நாட்டிலும் நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்தும் திறன் கொண்ட திறமையான நபர்களுக்கு வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் உலகளாவிய ரீதியில் சுமார் 800 மாணவர்களுக்கு ஐக்கிய இராஜ்ஜிய பல்கலைக்கழகங்களில் முதுகலை பட்டம் பெற வாய்ப்பு வழங்கப்படுகிறது. 1960 முதல், CSC ஆனது 31,000 தனிநபர்களுக்கு ஐக்கிய இராஜ்யத்தில் படிக்கவும் திறன்களைப் பெறவும், அறிவைப் பெறவும் மற்றும் உலகளாவிய வளர்ச்சி சவால்களைச் சமாளிப்பதற்கான வலையமைப்புகளை உருவாக்கவும் நிதியளித்துள்ளது.

# பெண் தொழில்முயற்சியாளர் விருதுகள் 2024




கைத்தொழில் மற்றும் வர்த்தகத்திற்கான மகளிர் சம்மேளனம் தனது வருடாந்த முதன்மை நிகழ்வான "WCIC PRATHIBHABHISHEKA - WOMEN ENTREPRENEUR AWARDS 2024" என்ற பெண் தொழில்முயற்சியாளர் விருது நிகழ்வை ஆரம்பித்துள்ளமை குறித்து அறிவித்துள்ளது.

இலங்கையிலும், சார்க் பிராந்தியத்திலும் மிகச் சிறந்த பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு அங்கீகாரமளித்து, வெகுமதி யளிப்பதே இதன் நோக்கம்.

"பெண் தொழில்முயற்சியாளர் விருதுகள் 2024 நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2025 ஜனவரியில் இடம்பெறவுள்ள வைபவத்தில் பெருமதிப்புமிக்க WCIC PRATHIBHABHISHEKA என்ற பெண் தொழில்முயற்சியாளர் விருதுகள் 2024 இல் போட்டியிடுவதற்கு கடந்த சில ஆண்டுகளில் எந்த கடினமான சூழ்நிலையையும் எதிர்கொண்டு அதிலிருந்து வெளிவந்துள்ள தமது சரித்திரங்கள் மற்றும் சாதனைகளை பகிர்ந்து கொள்ளுமாறு மிகச் சிறந்த பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு நாம் அழைப்பு விடுக்கின்றோம். தமது தொழிலை விரிவுபடுத்தி வளர்ப்பதில் அவர்களின் உறுதிப்பாடு மற்றும் பொருளாதாரத்திற்கு அவர்களுடைய பங்களிப்பு மற்றும் விளைவு ஆகியவற்றுக்காக பெண் தொழில்முயற்சியாளர்களைக் கௌரவிக்கும் வகையில் இவ்விருது வைபவம் இடம்பெறும்.

# பெண்கள் வணிக மேம்பாடு



இலங்கை வர்த்தக சம்மேளனம், MDF Training & Consultancy நிறுவனத்துடன் இணைந்து, இலங்கையில் பெண்கள் வணிக மேம்பாட்டுப் பயிற்சியாளர்களின் திறன்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட, பயிற்சியாளர்களை பயிற்றுவிக்கும் (ToT) திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.

"இலங்கையில் பெண்கள் வணிக மேம்பாட்டுப் பயிற்சியாளர்களின் திறனைக் கட்டியெழுப்புதல்" எனும் தலைப்பில் இந்த நிகழ்ச்சித் திட்டம் இரண்டு முக்கிய அமர்வுகளாக நடத்தப்பட்டது. இதில் தெரிவு செய்யப்பட்ட 30 பயிற்சியாளர்கள் பங்குபற்றினர்.

இது தொடர்பில் MDF Training & Consultancy திட்ட முகாமையாளர் Zoe Lawson தெரிவிக்கையில், "இலங்கையில் பெண்களுக்குச் சொந்தமான சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான (SME) 17 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி இடைவெளி மற்றும் இலங்கையில் வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முனைவு ஆகியவற்றில் பாலின சமத்துவமின்மை ஆகியவற்றை நிவர்த்தி செய்ய வேண்டிய தேவை காணப்படுகின்றது. வங்கிக் கடன் திட்டங்கள், பிரத்தியேகமான பயிற்சி மற்றும் வணிகத் திட்டமிடல் ஆகியன, தொழில்நுட்ப மற்றும் நிதி ஆதரவு வழிமுறைகளை வெற்றிகரமாக மேற்கொள்ள உதவும்". இந்த திட்டமானது, பெண் தொழில்முனைவோருக்கு ஆதரவளித்து வழிகாட்டக்கூடிய பெண் பயிற்சியாளர்களின் ஆற்றல்மிக்க வலையமைப்பை வளர்ப்பதற்கான பரந்த முயோபாயத்தின் ஒரு பகுதியாகும். பெண்களின் தொழில்முனைவு, இணைய வர்த்தகம், சூழலுக்கு உகந்த வணிகங்கள், டிஜிட்டல் சந்தைப்படுத்தல், வணிக பயிற்சித் திறன்கள் போன்ற தலைப்புகளில் இங்கு விரிவான பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

# வணிக விசா பிரச்சினை குறித்து அவசர நடவடிக்கை எடுக்குமாறு JAAF கோரிக்கை

ஆகஸ்ட் 2 முதல் இடைநிறுத்தப் பட்டுள்ள குறுகிய கால வணிக வீசாக்களை வழங்குவதில் ஏற்பட்டுள்ள தொடர்ச்சியான பிரச்சனைகளை அவசரமாறு தீர்க்குமாறு இலங்கை அரசாங்கத்திற்கு ஒன்றிணைந்த ஆடை சங்கங்களைன் மன்றம் (JAAF), கோரிக்கை விடுத்துள்ளது.

வாங்குபவர்கள், இயந்திரங்கள் வழங்குபவர்கள், தொழில்நுட்ப சேவை வழங்குபவர்கள் உள்ளிட்ட அனைத்து உத்தியோகபூர்வ வெளிநாட்டு வணிகப் பயணிகளும், வணிக வீசா வழங்கும் தகுதியான அமைப்பு இல்லாததால் இலங்கைக்குள் பிரவேசிப்பதற்கு



பெரும் சிக்கல்களை எதிர் கொண்டுள்ளதாக JAAF குறிப்பிட்டுள்ளது.aa On Arrival இல் சுற்றுலா விசாக்கள் கிடைக்கின்ற போதிலும், இந்த வழிமுறையின் மூலம் வணிக விசா வழங்கும் வசதி தற்போது இல்லை.

குறுகிய கால வணிக வருகைகளுக்காக வரும் வெளிநாட்டவர்கள் சுற்றுலா விசாக்களுக்கு தகுதியற்றவர்கள், இது வெளிநாட்டு வணிக வருகையாளர்களுக்கு இடமளிக்கும் நாட்டின் திறனில் ஒரு முக்கியமான இடைவெளியை விட்டுச்செல்கிறது. ஏற்றுமதி மற்றும் வணிக விரிவாக்கத்திற்கு சர்வதேச ஈடுபாடு இன்றியமையாததாக இருக்கும் குறிப்பாக ஆடை மற்றும் உற்பத்தி போன்ற துறைகளில், நாட்டின் பொருளாதார மீட்சிக்கு இந்த வருகையாளர்கள் அவசியம் என்று JAAF சுட்டிக்காட்டுகிறது.

# SDF பணிப்பாளராக சுறஞ்சனி

சர்வோதய டெவலெப்மென்ட் பினான்ஸ் பிஎல்சி, 2024 ஆகஸ்ட் 1 முதல் அமுலுக்கு வரும் வகையில் திருமதி றஞ்சனி விக்கிரமரட்ண அவர்களை நிறைவேற்று அதிகாரமற்ற, சுயாதீன பணிப்பாளராக நியமித்துள்ளமை குறித்து மகிழ்ச்சியுடன் அறிவித்துள்ளது.

2021 ஆம் ஆண்டின் பணிப்புரை இலக்கம் 06 இன் நிதி வணிகச் சட்டமூலம் (முக்கிய பொறுப்புள்ள நபர்களின் தகமை மற்றும் சொத்து குறித்த மதிப்பீடு) 3.2 க்கு அமைவாக இலங்கை மத்திய வங்கியிடமிருந்து இந்த நியமனத் திற்கு தேவையான அனைத்து அங்கீகாரங்களும் பெறப்பட்டுள்ளார்.

இலங்கையின் முன்னணி, அபிவிருத்தி நிதிநிறுவனமான சர்வோதய டெவலெப்மென்ட் பினான்ஸ் பிஎல்சி, விவசாயத் துறையில் கவனம் செலுத்தியுள்ளதோடு, வசதிகள் குறைந்த கிராம மற்றும் நகர்ப்புற சமூகங்களுக்கு ஆதரவளித்து வருகின்றது.

திருமதி விக்கிரமரட்ண அவர்கள் SDF நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கு ஆழமான அனுபவத்தையும், நிபுணத்துவத்தையும் கொண்டு வந்துள்ளார்.அவரது தொழில்சார் பின்னணியைப் பொறுத்தவரை வங்கி மற்றும் கணக்காய்வுத் துறையில் கணிசமான



பங்களிப்பாற்றியுள்ளார்.

அவர் 1995 முதல் 2009 வரை டொயிஷ் வங்கியின் கொழும்புக் கிளையின் கணக்காய்வுத்துறை தலைமை அதிகாரியாக கடமையாற்றியுள்ளதுடன், செயல்பாட்டு கணக்காய்வுகள் மற்றும் பல்வேறு நாடுகளில் பிராந்திய மற்றும் சர்வதேச தொழிற்பாடுகளிலும் ஈடுபட்டுள்ளார். அவர் தனது ஆரம்ப தொழில்வாழ்வில் பெருந்தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக நலன்புரி நிதியத்தில் கணக்காளர் மற்றும் நிர்வாக முகாமையாளராகவும், ஏர்ன்ஸ்ட் அன்ட் யங் நிறுவனத்தின் சிரேஷ்ட கணக்காய்வாளராகவும் கடமையாற்றியுள்ளதுடன், முகாமைத்துவ மற்றும் நிதியியல் கண்காய்வுகளில் கணிசமான அனுபவத்தைப் பெற்றுள்ளார்.

# செலான் வலுவான பதிவு





செலான் வங்கி ஜூன் 30, 2024இல் முடிவடைந்த ஆறு மாதங்களுக்கு (H1) ரூ. 4,558 மில்லியன் வரிக்குப் பின்னரான இலாபத்துடன் (PAT) வலுவான செயற்திறனைப் பதிவுசெய்தது.

இது 2023ஆம் ஆண்டில் இதே காலகட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட ஷரூ. 2,575 மில்லியனில-ிருந்து குறிப்பிடத்தக்க 77% வளர்ச்சியை பிரதிபலிக்கிறது. சவாலான சந்தை நிலவரங்கள் இருந்தபோதிலும் வரிக்கு முன்னரான இலாபம் (PBT) முன்னைய ஆண்டை விட 76% அதிகரிப்பைக் காட்டி ரூ. 7,331 மில்லியனை எட்டியது.

வங்கியின் நிகர வட்டி வருமானம் ரூ. 20,468 மில்லியனிலிருந்து ரூ. 18,590 மில்லியனாக 9.18%ஆல் குறைவடைந்ததுடன் நிகர வட்டி மிகை 5.76% இலிருந்து 5.17% ஆகக் குறைந்துள்ளது.

நிகர கட்டண அடிப்படையிலான வருமானம் 6.29%ஆல் அதிகரித்தது. இது முதன்மையாக அட்டைகள் தொடர்பான வருமானம், பணம் அனுப்புதல் மற்றும் பிற கடன் சேவைகள் ஆகியவற்றினூடான வருமான அதிகரிப்பின் பிரதிபலிப்பு ஆகும். மொத்த தொழிற்பாட்டு வருமானம் ரூ. 23,279 மில்லியனாக இருந்தது. இது கடந்த ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் 5.41% குறைவை காட்டுவதுடன் பெரும்பாலும் நிகர வட்டி மிகையின் குறைவே காரணம் ஆகும்.

# நேரடி வெளிநாட்டு முதலீடுகள் மூலம் இலங்கை கொண்டுள்ள சாத்தியக்கூறுகளை கட்டவிழ்த்தல்

அண்மைய வருடங்களில் இலங்கைக்கு ஏராளமான நேரடி வெளிநாட்டு முதலீடுகள் (FDI) கிடைக்கப் பெற்றுள்ளன. இந்த முதலீடுகளில் ஒரு சில, பொருளாதாரத்தை நெருக்கடி யிலிருந்து மீட்டெடுக்க அத்தியாவசியமானவையாக அமைந்துள்ளன.

ஆயினும், மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி, துறைமுகங்கள், கல்வி, சுகாதாரம் போன்ற மேலும் சில துறைகளில் இது இன்னும் அதிக தேவையாகும்.

உலக வங்கியின் 2022 ஆம் ஆண்டு அறிக்கைக்கு அமைய, 22.18 மில்லியன் மக்கள் கொண்ட இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 74.4 பில்லியன் டொலர்களாக மதிப்பிடப்பட்டுள்ளது.



எமது நெருங்கிய அண்டை நாடான இந்தியாவுடன் இதை ஒப்பிடுகையில், அது 1.417 பில்லியன் மக்கள் தொகையுடன் 3.417 ட்ரில்லியன் அமெரிக்க டொலர் மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கொண்டுள்ளது. பாமர மக்களுக்கு இது ஒரு தேவையற்ற கணிப்பீடாகத் தோன்றினாலும், உண்மையில் இது எதை காட்டுகின்றது என்றால், இந்தியா போன்ற நாடுகளில் தன்னிறைவு பெற்ற துறைகளை அடைவதற்கு அவசியமான வளங்கள் காணப்படுகின்றன. சிறியளவிலான GDP இனையும், சிறியளவிலான நிலப்பரப்பையும் கொண்ட இலங்கை போன்ற நாட்டுக்கு இவ்விடயம் ஒரு துரதிர்ஷ்டவசமான நிலையாகும்.

# TEA இன் 25வது வருடாந்த பொதுக்கூட்டம்

தேயிலை ஏற்றுமதியாளர்கள் சங்கம் (Tea Exporters Association - TEA) தனது 25வது வருடாந்த பொதுக் கூட்டத்தை (Annual General Meeting - AGM) 2024 செப்டெம்பர் 06 அன்று கொழும்பு, தாஜ் சமுத்ரா ஹோட்டலின் Grand Marquee இல் நடாத்தியுள்ளது.

தேயிலைத் தொழில்துறையின் நாட்காட்டியில் மிகவும் முக்கியமானதொரு நிகழ்வாகக் கருதப்படுகின்ற இந்நிகழ்வில், தொழிற்துறையுடன் தொடர்புபட்ட 500 க்கும் மேற்பட்ட முக்கிய பிரமுகர்கள் மற்றும் மதிப்பிற்குரிய விருந்தினர்கள் கலந்து சிறப்பித்துள்ளனர்.

வுநுயு இன் 25வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதுடன் இணைந்ததாக, இச்சங்கம் இலங்கையின் தேயிலை தொழில்துறை மீது கொண்டுள்ள தொடர்ச்சியான அர்ப்பணிப்பு மற்றும் பரிணாம மாற்றம் கண்டு வருகின்ற சர்வதேச சவால்களுக்கு மத்தியில் எந்த சூழ்நிலைக்கும் முகங்கொடுத்து, அதிலிருந்து வெளிவருவதில் அதன் தொடர்ச்சியான ஆற்றல் குறித்து காண்பிப்பதற்கான வாய்ப்பாக இந்த AGM அமையப்பெற்றது. மாலைதீவு மற்றும் இலங்கைக்கான உலக வங்கியின் முகாமையாளரான




திரு. கெவோர்க் சர்க்சியன் அவர்கள் பிரதம அதிதியாக AGM நிகழ்வில் கலந்து சிறப்பித்துள்ளார்.

# மிகச் சிறந்த விநியோக கூட்டாண்மைக்கான அங்கீகாரம்



இலங்கையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் முன்னணி நாமமாகத் திகழ்ந்து வருகின்ற Solar Booze (Private) Limited நிறுவனமானது, இலங்கையில் Huawei Inverter களுக்கான அங்கீகரிக்கப்பட்ட விநியோக கூட்டாளராக ஆற்றியுள்ள அதன் மிகச்சிறப்பான ஒத்துழைப்புக்காக Huawei Fusion Solar நிறுவனத்தால் கௌரவிக்கப்பட்டுள்ளது. நிலைபேணத்தக்க எதிர்காலத்தின் மீது நாட்டின் அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டியவாறு, சூரிய மின்வலு உற்பத்தி ஆற்றலில் 1GW இனை இலங்கை எட்டியுள்ள மகத்தான சாதனையைக் கொண்டாடும் வகையில், அண்மையில் கொழும்பு ஷங்கிரி-லா ஹோட்டலில் இடம்பெற்ற 'Watt a Milestone' என்ற விசேட வைபவத்தின் போது Solar Booze நிறுவனத்துக்கு இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி நதீகா ஹேரத் அவர்கள் இச்சாதனை குறித்து கருத்து வெளியிடுகையில், "உலகப் பிரசித்தி பெற்ற Huawei போன்ற Fortune 500 வர்த்தகநாமம் ஒன்றின் புரட்சிகரமான விநியோகத்தராகச் செயற்பட்டு, இலங்கையில் நிலைபேணத்தக்க எதிர்காலத்தை நோக்கிய மாற்றத்திற்கான பயணத்தில் அங்கம் வகிப்பதையிட்டு Solar Booze நிறுவனம் மிகவும் கௌரவம் அடைந்துள்ளது. இலங்கையிலுள்ள மிகவும் நம்பிக்கைக்குரிய சூரிய மின்வலு உபகரண வழங்குனராக, நேர்மையுடன் செயற்பட்டு எமது வாடிக்கையாளர்களுக்கு தரமான தயாரிப்புக்களையும், மகத்தான சேவைகளையும் வழங்கவேண்டும் என்பதே எமது நோக்கம்," என்று குறிப்பிட்டார்.

# நிலையான வளர்ச்சிக்காக UKஇன் DCTS



இலங்கையின் பொருளாதாரத்திற்கு பெரும் பலம் சேர்க்கும் ஆடைத் தொழில்துறையானது, இலங்கைப் பொருளாதாரத்தின் எதிர்காலத்திற்கு நம்பிக்கையூட்டும் வகையில், தற்போது மற்றுமொரு நெருக்கடியான கட்டத்தை எட்டியுள்ளது. COVID-19 தொற்றுநோயைத் தொடர்ந்து வளர்ந்து வரும் பொருளாதார சவால்களை எதிர்கொள்ள UKஇன் வளரும் நாடுகளின் வர்த்தகத் திட்டம் (DCTS) பலப்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், ஒரு நாட்டின் வளர்ச்சியில் முன்னணி காரணியாக இருக்கும் நாட்டின் சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களில் (SMEs) இத்திட்டத்தின் தாக்கம் குறித்து சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும். DCTS ஆனது முந்தைய பொதுமைப்படுத்தப்பட்ட விருப்பத்தேர்வுகளை (GSP) மாற்றியமைக்கிறது, இது இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களில் 99% க்கும் அதிகமான சுங்க வரிகளுக்கு தகுதியுடையதுடன் UK சந்தையில் இலங்கைக்கு மேம்பட்ட வாய்ப்புக்களை வழங்குகிறது. இலங்கையின் ஆடைகளுக்கான இரண்டாவது பெரிய சந்தையாக UK இருப்பதால், இந்தத் திட்டமானது ஏற்றுமதி வருவாயை கணிசமாக உயர்த்துவதுடன், தொழில்துறைக்கு மிகவும் தேவையான ஸ்திரத்தன்மையையும் வழங்க முடியும்.

# "Sterling Ultra" மற்றும் அடுத்த தலைமுறை கூரைத்தீர்வு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன

E.B. Creasy & Co. PLC நிறுவனத்தால் கையகப்படுத்தப்பட்ட BlueScope Lysaght Lanka (Private) Limited என்ற நிறுவனத்தின் மீள்நாமமிடலுடன் தோன்றியுள்ள புதிய நிறுவனமான Sterling Steels Limited என்ற நிறுவனம், அண்மையில் ITC Ratnadipa ஹோட்டலில் இடம்பெற்ற விமரிசையான நிகழ்வில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. Lysaght இற்குப் பதிலாக, இலங்கையில் 1ஆம் ஸ்தானத்திலுள்ள தரமான உருக்கிலான கூரைத் தீர்வுகள் வர்த்தகநாமமாக அமைந்துள்ள, நிறுவனத்தின் புதிய முதன்மை, உயர்ரக வர்த்தகநாமமான "Sterling Ultra" இந்நிகழ்வில் அறிமுகப்படுத்தப்பட்டது. தரம் மற்றும் மகத்துவம் ஆகியவற்றின் மீதான அர்ப்பணிப்பை மீளவும் வலியுறுத்தும் வகையில், இலங்கையில் Tata BlueScope Steels இன் ஏகபோக முகவராக Sterling Steels தொடர்ந்தும் பெருமையுடன் செயற்படும். அதன் பிரதான வர்த்தகநாம அறிமுகத்துடன் இணைந்ததாக, இலங்கைச் சந்தையில் முதல் முறையாக, புத்தாக்கம்மிக்க "MaxSeamTM 470" எனப்படும் அடுத்த தலைமுறை 360 கோணத்தில் பொருத்தப்படக்கூடிய கூரைத்தொகுதியையும் Sterling Steels Limited அறிமுகப்படுத்தியுள்ளது.




முன்னணி வர்த்தக நிறுவனங்களின் சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகள், புகழ்பெற்ற கட்டிடக்கலைஞர்கள் மற்றும் பொறியியலாளர்கள் மற்றும் ஏனைய மதிப்பிற்குரிய விருந்தினர்கள் என பலரும் இந்த அறிமுக நிகழ்வில் கலந்து சிறப்பித்துள்ளதுடன், நிறுவனத்தின் வரலாற்றில் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மைல்கல்லாக மாறியுள்ளது.

# அமானா வங்கியின் சுய-வங்கிச் சேவைகள் காத்தான்குடி கடற்கரை வீதிக்கு விஸ்தரிப்பு



அமானா வங்கி தனது புதிய சுய வங்கிச் சேவை நிலையத்தை காத்தான்குடி கடற்கரை வீதிக்கு விஸ்தரித்திருந்தது. அதனூடாக அப்பகுதியைச் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கு எந்நேரத்திலும் பணத்தை மீளப் பெறுவது, பண வைப்புகளை மேற்கொள்வது மற்றும் காசோலை வைப்புகளை மேற்கொள்வது போன்ற வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த சுய வங்கி நிலையத்தின் அங்குரார்ப்பணத்துடன், அமானா வங்கியின் நாடு முழுவதிலும் காணப்படும் அணுகும் பகுதிகள் 64 ஆக அதிகரித்துள்ளன. இதில் 33 முழு வசதிகளையும் கொண்ட கிளைகளாகவும், 31 சுய சேவை நிலையங்களாகவும் அமைந்துள்ளன. அல்-அக்ஸா மஸ்ஜிதி தொகுதி, கடற்கரை வீதி, புதிய காத்தான்குடி 03 எனும் பகுதியில் அமைந்துள்ள இந்த சுய வங்கி சேவை நிலையத்தினூடாக, வங்கி வசதிகள் காணப்படாத அல்லது வங்கி வசதிகள் மட்டுப்படுத்தப்பட்ட பகுதியில் வங்கியை அணுகும் வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான அமானா வங்கியின் அர்ப்பணிப்பு மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

# எசல பெரஹரவிற்கு தொடர்ந்து அனுசரணை

பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி, வரலாற்றுப்புகழ் மிக்க கண்டி எசல பெரஹரவிற்கு அனுசரணை வழங்கி, கலாச்சார பாரம்பரியத்திற்கு ஆதரவளிக்கும் தனது மரபினை தொடர்ந்தும் பெருமையுடன் முன்னெடுத்துள்ளது. அண்மையில் இடம்பெற்ற வைபவமொன்றில், பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சியின் பிரதம நிறைவேற்று அதிகாரி சஞ்சீவ பண்டாரநாயக்க, பிரதம தொழிற்பாட்டு அதிகாரி உதேஷ் குணவர்த்தன, வர்த்தக நாம ஊக்குவிப்பு மற்றும் தொடர்பாடல்களுக்கான உதவிப் பொது முகாமையாளர் ரஜீவ் டேவிட் மற்றும் கிளை முகாமையாளர் தினேஷ் விலாராச்சிகே ஆகியோர் ஒன்றிணைந்து காசோலைக்கான அனுசரணையை ஸ்ரீ தலதா மாளிகையின் தியவனத நிலமே பிரதீப் நிலங்க தெல அவர்களிடம் கையளித்து வைத்துள்ளனர். பிரதீப் நிலங்க தெல அவர்கள் பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் வழங்கியுள்ள தாராளமான பங்களிப்புக்கான தனது நெஞ்சார்ந்த நன்றியை வெளிப்படுத்தியதுடன், இலங்கையின் செழிப்பான பாரம்பரியங்கள் மற்றும் பழக்கவழக்கங்களை பேணிப் பாதுகாப்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்ற இந்த மரியாதைக்குரிய கலாச்சார திருவிழாவினைக் கட்டிக்காத்து, கொண்டாட இது உதவுவதாக குறிப்பிட்டார்.

